**மண்முனை தென் மேற்கு பிரதேச சபை**
**மட்டக்களப்பு மாவட்டம்**

---

## 1 நிதிக்கூற்றுகள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2016 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 30 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. 2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆகஸ்ட் 30 இல் சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மண்முனை தென் மேற்கு பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடு

கடன் பதிவேட்டின்படி 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான ஊழியர் கடன் மீதி ரூபா 3,277,894 ஆகக் காணப்பட்ட போதிலும் நிதிக்கூற்றில் இம் மீதி ரூபா 3,618,969 ஆக காட்டப்பட்டிருந்தது இதன் விளைவாக ஐந்தொகையில் ஊழியர் கடன் நிலுவை ரூபா 341,075 ஆல் அதிகரித்து காட்டப்பட்டிருந்தது.

#### 1.3.2 ஆவணச்சான்றுகள் இன்மை

நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட பின்வரும் ஒவ்வொரு விடயத்திற்கும் எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயங்கள் | பெறுமதி (ரூபா) | சான்றுகளின்மை |
|---|---|---|
| காணிகளும் கட்டிடங்களும் | 161,153,332 | நிலையான சொத்து பதிவேடுகள் |
| பொறி இயந்திரம் | 2,855,423 | |
| மோட்டார் வாகனங்களும் வண்டிகளும் | 11,750,000 | |

| | | |
|---|---|---|
| தளபாடங்களும் பொருத்துக்களும் | 5,727,447 | |
| களஞ்சிய இருப்பு | 102,009 | களஞ்சியப் பதிவேடு |

**1.3.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை**

2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் கணனிகள், மற்றும் கணனி உதிரிப்பாகங்கள் மென்பொருட்கள் என்பவற்றை பதிவதற்காக சபையினால் தனியான பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை

**2 நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளின்படி 2016 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 6,604,178 ஆக இருந்ததுடன் ஒப்பிடுகையில் அதற்கு நேர் முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 5,685,067 ஆக இருந்தது.

**3 செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ பலவீனம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் நிதி ஏற்பாட்டின் கீழ் மேற்கொள்ளப்பட்டு 2016 திசெம்பர் 31 திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட வேண்டிய வீதி புனரமைப்பு, வடிகாண் அமைத்தல் மற்றும் குடிநீர் வழங்கல் வேலைகள் 2017 யூன் 30 ஆந் திகதி வரை ஆரம்பிக்கப்படாதிருந்த போதிலும் அவ்வேலைகள் திருப்திகரமாகப் பூர்த்திசெய்யப்பட்டதாக தொழில்நுட்ப உத்தியோகத்தரால் சான்றுபடுத்தப்பட்டு அவ்வமைச்சிடமிருந்து 2016 திசெம்பர் 31 ஆந் திகதி ரூபா 1,098,040 பணம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) நான்கு கிராமங்களுக்கு குடிநீர் வழங்குவதற்காக நீர்க் குழாய்களை அமைக்கும் வேலைகள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு ஒப்படைக்கப்பட்டு இவ்வேலைக்காக ரூபா 4,000,000 பணம் 2016 திசெம்பர் 27 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்த போதிலும் அவ் வேலைகள் இன்றுவரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை

**4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 தீர்வு காணப்படாத கணக்காய்வுப் பந்திகள்**

சபை தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வுப் பந்திகளில் சுட்டிக்காட்டப்பட்ட ஒழுங்கீனங்கள் மற்றும் குறைபாடுகள் சம்பந்தமாக சபையினால் இதுவரை சீர் செய்யப்படாத கணக்காய்வுப் பந்திகளுக்கான தொடர்பு கீழே தரப்பட்டுள்ளன.

| அறிக்கைக்கான தொடர்பு | | உள்ளடக்கப்பட்ட விடயம் |
|---|---|---|
| **ஆண்டு** | **பந்தி இலக்கம்** | |
| 2015 | 2.2.6 (I) | பிணைப் பணம் பெறவேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து பிணைப் பணம் பெறப்பட்டிருக்காமை. |
| 2015 | 4.1 | ஓய்வுபெற்ற மற்றும் இறந்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 189,947 கடன் நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமை. |

## 5. முறைமைகளும் மற்றும் கட்டுப்பாடுகளும்

கீழ்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| கட்டுப்பாடுகள் | விசேட கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் |
|---|---|
| (அ) கணக்கீடு | வைப்பு பேரேடு நாளதுவரையாக பேணப்படுதல் வேண்டும். |
| (ஆ) வருமான முகாமைத்துவம் | வருமான நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |